يُضٰعَفْ لَهُ الْعَذَابُ يَوْمَ الْقِيٰمَةِ وَيَخْلُدْ فِيْهٖ مُهَانًا ۖ﴿٦٩﴾ اِلَّا مَنْ
تَابَ وَاٰمَنَ وَعَمِلَ عَمَلًا صَالِحًا فَاُولٰٓئِكَ يُبَدِّلُ اللّٰهُ سَيِّاٰتِهِمْ
حَسَنٰتٍ ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا ﴿٧٠﴾ وَمَنْ تَابَ وَعَمِلَ صَالِحًا
فَاِنَّهٗ يَتُوْبُ اِلَى اللّٰهِ مَتَابًا ﴿٧١﴾ وَالَّذِيْنَ لَا يَشْهَدُوْنَ الزُّوْرَ ۙ وَ
اِذَا مَرُّوْا بِاللَّغْوِ مَرُّوْا كِرَامًا ﴿٧٢﴾ وَالَّذِيْنَ اِذَا ذُكِّرُوْا بِاٰيٰتِ رَبِّهِمْ لَمْ
يَخِرُّوْا عَلَيْهَا صُمًّا وَّعُمْيَانًا ﴿٧٣﴾ وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا هَبْ لَنَا
مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا ﴿٧٤﴾
اُولٰٓئِكَ يُجْزَوْنَ الْغُرْفَةَ بِمَا صَبَرُوْا وَيُلَقَّوْنَ فِيْهَا تَحِيَّةً وَّسَلٰمًا ۙ﴿٧٥﴾
خٰلِدِيْنَ فِيْهَا ؕ حَسُنَتْ مُسْتَقَرًّا وَّمُقَامًا ﴿٧٦﴾ قُلْ مَا يَعْبَؤُا بِكُمْ
رَبِّيْ لَوْلَا دُعَآؤُكُمْ ۚ فَقَدْ كَذَّبْتُمْ فَسَوْفَ يَكُوْنُ لِزَامًا ﴿٧٧﴾ ع الربع

## سُوْرَةُ الشُّعَرَاءِ مَكِّيَّةٌ وَهِيَ مِائَتَانِ وَسَبْعٌ وَعِشْرُوْنَ اٰيَةً وَاَحَدَ عَشَرَ رُكُوْعًا

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ المنزل ٥
طٰسٓمّٓ ﴿١﴾ تِلْكَ اٰيٰتُ الْكِتٰبِ الْمُبِيْنِ ﴿٢﴾ لَعَلَّكَ بَاخِعٌ
نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ ﴿٣﴾ اِنْ نَّشَاْ نُنَزِّلْ عَلَيْهِمْ
مِّنَ السَّمَآءِ اٰيَةً فَظَلَّتْ اَعْنَاقُهُمْ لَهَا خٰضِعِيْنَ ﴿٤﴾

69. மறுமை நாளில் அவருக்கு வேதனை இரட்டிப்பாக்கப்படும்; மேலும், இழிவுபடுத்தப்பட்டவராக அதில் என்றென்றும் தங்கிவிடுவார்.
70. (இப்பாவங்களிலிருந்து)எவர் தவ்பாச்செய்து, விசுவாசமும் கொண்டு நற்செயலும் செய்தாரோ அவரைத்தவிர; எனவே அத்தகையோர் _ அவர்களுடைய தீமைகளை நன்மைகளாக அல்லாஹ் மாற்றிவிடுவான்; மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக் கிருபையுடையவனாக இருக்கிறான்.
71. இன்னும், எவர் தவ்பாச்செய்து, நற்கருமங்களையும் செய்கின்றாரோ அவர், நிச்சயமாக முற்றிலும் அல்லாஹ்வின்பாலே திரும்பிவிடுகின்றார்.
72. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், பொய்சாட்சி சொல்ல மாட்டார்கள்; (ஒருகால்) வீணான காரிய(ம் நடக்கும் இட)த்தின் பக்கம் அவர்கள் சென்றுவிட்டால், கண்ணியமானவர்களாக (அதனைவிட்டும் ஒதுங்கிச்) சென்றுவிடுவார்கள்.
73. இன்னும், அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் இரட்சகனின் வசனங்களைக் கொண்டு உபதேசிக்கப்பட்டால் செவிடர்களாகவும், குருடர்களாகவும் அதன் மீது விழமாட்டார்கள் ( அதனை நன்குணர்ந்து அதன்படி நடப்பார்கள்).
74. மேலும், அவர்கள் எத்தகையோரென்றால் "எங்கள் இரட்சகனே! எங்கள் மனைவியர்களிடமிருந்தும், எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியைத் தந்தருள்வாயாக! அன்றியும், பயபக்தியுடையவர்களுக்கு எங்களை (நல்வழியில் நின்று அதன்பால் அழைக்கும்)வழிகாட்டியாகவும் நீ ஆக்குவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறுவார்கள்.
75. அத்தகையோர் _ அவர்கள் கஷ்டங்களைப்பொறுத்துக் கொண்டதன் காரணமாக, உயர்ந்த மாளிகையை (மறுமையில்) அவர்கள் கூலியாகக் கொடுக்கப்படுவார்கள். காணிக்கையாலும், சாந்தியாலும் அதில் வரவேற்கப்படுவார்கள்.
76. அதில் (அவர்கள்) நிரந்தரமாக(த் தங்கி)இருப்பவர்கள்; நிலையாகத் தங்குமிடத்தாலும், சிறிதுநேரம் தங்குமிடத்தாலும் அது அழகானதாகிவிட்டது.
77. (நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் (அல்லாஹ்வை) அழை(த்துப்பிரார்த்தி)ப்பது (மட்டும்)இல்லையெனில், என்னுடைய இரட்சகன் உங்களை பொருட்படுத்தியிருக்க மாட்டான்; ஏனெனில், நீங்கள் (அவனுடைய வசனங்களைப்) பொய்ப்படுத்திவிட்டீர்கள்; எனவே அ(தற்குரிய தண்டனையான)து கட்டாயமாக உங்களுக்கு உண்டாகும்.

---

அத்தியாயம் : 26

## அஷ்ஷுஅரா _ கவிஞர்கள்

வசனங்கள் : 227 மக்கீ ருகூஉகள் : 11

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).**

1. தா ஸீம் மீம்.
2. இவை, தெளிவான வேதத்தின் வசனங்களாகும்.
3. (நபியே! உம்மை) விசுவாசங் கொள்பவர்களாக அவர்கள் இல்லாததன் காரணமாக(த் துக்கத்தால்) உம்மை நீரே மாய்த்துக்கொள்வீர் போலும்!
4. நாம் நாடினால் வானத்திலிருந்து ஓர் அத்தாட்சியை அவர்கள் மீது இறக்கியிருப்போம்; (அப்போது) அவர்களுடைய கழுத்துகள் அதற்கு(க்குனிந்து) பணிந்தவையாக ஆகிவிடும்.

وَمَا يَاْتِيْهِمْ مِّنْ ذِكْرٍ مِّنَ الرَّحْمٰنِ مُحْدَثٍ اِلَّا كَانُوْا عَنْهُ
مُعْرِضِيْنَ ﴿٥﴾ فَقَدْ كَذَّبُوْا فَسَيَاْتِيْهِمْ اَنْۢبٰٓؤُا مَا كَانُوْا بِهٖ
يَسْتَهْزِءُوْنَ ﴿٦﴾ اَوَلَمْ يَرَوْا اِلَى الْاَرْضِ كَمْ اَنْۢبَتْنَا فِيْهَا مِنْ كُلِّ
زَوْجٍ كَرِيْمٍ ﴿٧﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿٨﴾
ع ٩/١ ٥
وَاِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿٩﴾ وَاِذْ نَادٰى رَبُّكَ مُوْسٰٓى اَنِ
ائْتِ الْقَوْمَ الظّٰلِمِيْنَ ﴿١٠﴾ قَوْمَ فِرْعَوْنَ ؕ اَلَا يَتَّقُوْنَ ﴿١١﴾ قَالَ رَبِّ
اِنِّيْٓ اَخَافُ اَنْ يُّكَذِّبُوْنِ ﴿١٢﴾ وَيَضِيْقُ صَدْرِيْ وَلَا يَنْطَلِقُ لِسَانِيْ
فَاَرْسِلْ اِلٰى هٰرُوْنَ ﴿١٣﴾ وَلَهُمْ عَلَيَّ ذَنْۢبٌ فَاَخَافُ اَنْ يَّقْتُلُوْنِ ﴿١٤﴾
قَالَ كَلَّا ۚ فَاذْهَبَا بِاٰيٰتِنَآ اِنَّا مَعَكُمْ مُّسْتَمِعُوْنَ ﴿١٥﴾ فَاْتِيَا فِرْعَوْنَ
فَقُوْلَآ اِنَّا رَسُوْلُ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٦﴾ اَنْ اَرْسِلْ مَعَنَا بَنِيْٓ اِسْرَآءِيْلَ ﴿١٧﴾
قَالَ اَلَمْ نُرَبِّكَ فِيْنَا وَلِيْدًا وَّلَبِثْتَ فِيْنَا مِنْ عُمُرِكَ سِنِيْنَ ﴿١٨﴾
وَفَعَلْتَ فَعْلَتَكَ الَّتِيْ فَعَلْتَ وَاَنْتَ مِنَ الْكٰفِرِيْنَ ﴿١٩﴾ قَالَ فَعَلْتُهَآ
اِذًا وَّاَنَا مِنَ الضَّآلِّيْنَ ﴿٢٠﴾ فَفَرَرْتُ مِنْكُمْ لَمَّا خِفْتُكُمْ فَوَهَبَ لِيْ
رَبِّيْ حُكْمًا وَّجَعَلَنِيْ مِنَ الْمُرْسَلِيْنَ ﴿٢١﴾ وَتِلْكَ نِعْمَةٌ تَمُنُّهَا عَلَيَّ
اَنْ عَبَّدْتَّ بَنِيْٓ اِسْرَآءِيْلَ ﴿٢٢﴾ قَالَ فِرْعَوْنُ وَمَا رَبُّ الْعٰلَمِيْنَ ﴿٢٣﴾

5. அர்ரஹ்மானிடமிருந்து புதிதான யாதொரு (நல்)உபதேசமும் _ அதனை அவர்கள் (நிராகரித்துப்) புறக்கணிக்கிறவர்களாக இருந்தே தவிர_ அவர்களிடம் வருவதில்லை.

6. (ஆகவே, வேதமாகிய இதனையும்) அவர்கள் திட்டமாகப் பொய்யாக்கினார்கள்; ஆகவே, அவர்கள் எதனைப் பரிகசித்துக் கொண்டிருந்தார்களோ அதன் (உண்மைச்) செய்திகள் அவர்களிடம் வந்துவிடும்.

7. பூமியின்பால் அவர்கள் பார்க்கவில்லையா? (அதில்) மேலான ஒவ்வொரு வகையிலிருந்தும் (பயன்தரக்கூடிய) எவ்வளவோ (புற்பூண்டுகளை ஜதை ஜதையாகவே) நாம் முளைப்பித்திருக்கின்றோம்.

8. நிச்சயமாக இதில் அத்தாட்சி இருக்கின்றது;(எனினும்) அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.

9. மேலும், (நபியே!) உம்முடைய இரட்சகன் _ அவனே நிச்சயமாக (யாவரையும்) மிகைத்தோன்; மிகக் கிருபையுடையோன்.

10. இன்னும், (நபியே!) உம்முடைய இரட்சகன், "நீர் அநியாயக்கார சமூகத்தாரிடம் செல்வீராக!" என (க்கட்டளையிட்டு) மூஸாவை அழைத்ததை (நீர் நினைவு கூர்வீராக).

11. ஃபிர் அவ்னுடைய சமூகத்தாரிடம்(செல்வீராக!) அவர்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட மாட்டார்களா?

12. அ(தற்க)வர் " என் இரட்சகனே ! அவர்கள் என்னைப் பொய்ப்படுத்தி விடுவார்கள் என்று நிச்சயமாக நான் பயப்படுகிறேன்" என்றுகூறினார்.

13. "(அவ்வாறு பொய்ப்படுத்தினால்) என் மனம் நெருக்கடிக்குள்ளாகியும்விடும்; என் நாவும் (சரியாக) பேசாது; ஆதலால் (எனக்கு வஹீஅனுப்பியது போன்று) ஹாரூனுக்கு (வஹீ) அனுப்புவாயாக!

14. " மேலும், அவர்களுக்கு என்மீது ஒரு (கொலைக்)குற்றச்சாட்டுதலும் உண்டு; அதற்காக அவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள் என்றும் நான் பயப்படுகிறேன்" (என்று கூறினார்).

15. (அதற்கு) "அவ்வாறன்று, நீங்களிருவரும் நம்முடைய அத்தாட்சிகளை (எடுத்து)க் கொண்டு செல்லுங்கள்; நிச்சயமாக நாம் உங்களுடன் (யாவற்றையும்) செவியேற்கக்கூடியவர்களாக இருப்போம்என்று (அல்லாஹ்வாகிய)அவன் கூறினான்.

16. ஆகவே, நீங்களிருவரும் ஃபிர் அவ்னிடம் சென்று, நிச்சயமாக நாங்கள் அகிலத்தாரின் இரட்சகனாகிய தூதராவோம் என்று நீங்களிருவரும் கூறுங்கள்.(அதன் காரணமாக)

17. "இஸ்ராயீலின் மக்களை நீ எங்களுடன் அனுப்பிவிடு" (என்றும் கூறுங்கள்).

18. (அவ்வாறே ஃபிர் அவ்னிடம் சென்று அவ்விருவரும் கூறவே,) அதற்கவன் (மூஸாவிடம்), " குழந்தையாக உம்மை (எடுத்து) எங்களுக்கு மத்தியில் நாங்கள் வளர்க்கவில்லையா? நீர் உம் வயதில் அநேக ஆண்டுகள் நம்மிடத்தில் தங்கியும் இருந்தீர்" என்று அவன் கூறினான்.

19. "நீர் செய்த (கொலைச்) செயலையும் செய்தீர்! மேலும், நீர் நன்றிமறந்தவர்களில் உள்ளவராகவும் இருக்கின்றீர்"(என்றும் ஃபிர் அவ்ன் கூறினான்).

20. அதற்கு; " நான் அந்நேரத்தில் அறியாதவர்களில் (ஒருவனாக) இருந்த நிலையில் அதனை நான் செய்தேன்" என்று(மூஸாவாகிய)அவர் கூறினார்.

21. "ஆதலால் நான் உங்களுக்கு பயந்தபொழுது உங்களை விட்டு வெருண்டோடிவிட்டேன்; பிறகு என்னுடைய இரட்சகன் எனக்கு அறிவையும் கொடுத்துத் (தன்னுடைய) தூதர்களில் உள்ளவனாகவும் என்னை ஆக்கினான்."

22. "மேலும், (குழந்தைப்பருவத்தில் என்னை நீ வளர்த்துப்பரிபாலித்த)அது, (என் இனத்தாராகிய) இஸ்ராயீலின் மக்களை நீ அடிமையாக வைத்துக் கொண்டிருக்கும் நிலைமையில்,(என்னையும் அடிமையாக்காது) நீ எனக்கு சொல்லிக் காண்பிக்கக்கூடிய ஓர் அருட்கொடையே ஆகும்"(என்று கூறினார்).

23. (அதற்கு) ஃபிர் அவ்ன் "அகிலத்தாரின் இரட்சகன் என்றால் என்ன?" என்று கேட்டான்.

قَالَ رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا ؕ اِنْ كُنْتُمْ مُّوْقِنِيْنَ ۝۲۴
قَالَ لِمَنْ حَوْلَهٗۤ اَلَا تَسْتَمِعُوْنَ ۝۲۵ قَالَ رَبُّكُمْ وَرَبُّ اٰبَآئِكُمُ
الْاَوَّلِيْنَ ۝۲۶ قَالَ اِنَّ رَسُوْلَكُمُ الَّذِيْۤ اُرْسِلَ اِلَيْكُمْ لَمَجْنُوْنٌ ۝۲۷
قَالَ رَبُّ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَمَا بَيْنَهُمَا ؕ اِنْ كُنْتُمْ تَعْقِلُوْنَ ۝۲۸
قَالَ لَئِنِ اتَّخَذْتَ اِلٰهًا غَيْرِيْ لَاَجْعَلَنَّكَ مِنَ الْمَسْجُوْنِيْنَ ۝۲۹
قَالَ اَوَلَوْ جِئْتُكَ بِشَيْءٍ مُّبِيْنٍ ۝۳۰ قَالَ فَاْتِ بِهٖۤ اِنْ كُنْتَ مِنَ
الصّٰدِقِيْنَ ۝۳۱ فَاَلْقٰى عَصَاهُ فَاِذَا هِيَ ثُعْبَانٌ مُّبِيْنٌ ۝۳۲ وَّنَزَعَ يَدَهٗ
فَاِذَا هِيَ بَيْضَآءُ لِلنّٰظِرِيْنَ ۝۳۳ قَالَ لِلْمَلَاِ حَوْلَهٗۤ اِنَّ هٰذَا لَسٰحِرٌ ع ۲
عَلِيْمٌ ۝۳۴ يُّرِيْدُ اَنْ يُّخْرِجَكُمْ مِّنْ اَرْضِكُمْ بِسِحْرِهٖ ۖۗ فَمَاذَا تَاْمُرُوْنَ ۝۳۵
قَالُوْۤا اَرْجِهْ وَاَخَاهُ وَابْعَثْ فِي الْمَدَآئِنِ حٰشِرِيْنَ ۝۳۶ يَاْتُوْكَ بِكُلِّ
سَحَّارٍ عَلِيْمٍ ۝۳۷ فَجُمِعَ السَّحَرَةُ لِمِيْقَاتِ يَوْمٍ مَّعْلُوْمٍ ۝۳۸ وَّقِيْلَ
لِلنَّاسِ هَلْ اَنْتُمْ مُّجْتَمِعُوْنَ ۝۳۹ لَعَلَّنَا نَتَّبِعُ السَّحَرَةَ اِنْ
كَانُوْا هُمُ الْغٰلِبِيْنَ ۝۴۰ فَلَمَّا جَآءَ السَّحَرَةُ قَالُوْا لِفِرْعَوْنَ اَئِنَّ
لَنَا لَاَجْرًا اِنْ كُنَّا نَحْنُ الْغٰلِبِيْنَ ۝۴۱ قَالَ نَعَمْ وَاِنَّكُمْ اِذًا لَّمِنَ
الْمُقَرَّبِيْنَ ۝۴۲ قَالَ لَهُمْ مُّوْسٰۤى اَلْقُوْا مَاۤ اَنْتُمْ مُّلْقُوْنَ ۝۴۳

24. (அதற்கு) "நீங்கள் உறுதிகொண்டவர்களாக இருப்பின், வானங்கள் மற்றும் பூமி, அவை இரண்டிற்கும் மத்தியிலுள்ளவை ஆகியவற்றின் இரட்சகன்" என்று (மூஸா) கூறினார்.

25. அ(தற்க)வன், "தன்னைச் சூழ இருந்தவர்களிடம், நீங்கள் (இவர் கூற்றைச்) செவிமடுக்கிறீர்கள் அல்லவா?" என்று கேட்டான்.

26. (அதற்கு மூஸாவாகிய) அவர்; உங்களின் இரட்சகனும், முன் சென்று போன உங்கள் மூதாதையர்களின் இரட்சகனுமாவான் என்று கூறினார்.

27. "நிச்சயமாக உங்களிடம் அனுப்பப் பட்டிருக்கிறாரே உங்களுடைய தூதர்_(அவர்) திட்டமாக ஒரு பைத்தியக்காரர்தாம்" என்று(ஃபிர் அவ்னாகிய) அவன் கூறினான்.

28. (அதற்கு மூஸா "அவனே) கிழக்கிற்கும், மேற்கிற்கும், இவ்விரண்டிற்குமிடையே உள்ளவற்றிற்கும் இரட்சகன். (இதனை) நீங்கள் விளங்கிக் கொள்பவர்களாக இருப்பின்(அவனை விசுவாசங்கொள்ளுங்கள்)" என்று கூறினார்.

29. அ(தற்க)வன், "என்னை அன்றி (மற்றெதனையும் வணக்கத்திற்குரிய) நாயனாக நீர் எடுத்துக்கொண்டால், நிச்சயமாக நான் உம்மைச் சிறையிடப்பட்டோரில் (ஒருவராக) ஆக்கி விடுவேன்" என்று கூறினான்.

30. அ(தற்க)வர், "தெளிவான (அத்தாட்சியாக) ஒரு பொருளை நான் உன்னிடம் கொண்டு வந்தாலுமா?" என்று கேட்டார்.

31. அ(தற்க)வன், "நீர் உண்மையாளர்களில் இருப்பின், அதனைக் கொண்டுவாரும்" என்று கூறினான்.

32. ஆகவே, (மூஸாவாகிய)அவர் தன் தடியைப் போட்டார்; உடனே அது தெளிவானதொரு (மலைப்) பாம்பாகிவிட்டது.

33. இன்னும் அவர் தன்னுடைய கையை(ச் சட்டைக்குள்ளிலிருந்து) வெளியில் எடுத்தார்; அப்போது அது பார்ப்போருக்கு (ஒளிமயமான) வெண்மையாக இருந்தது.

34. தன்னைச் சூழ இருந்த பிரதானிகளிடம் "நிச்சயமாக இவர் (மிகவும்) நன்கறிந்த சூனியக்காரர்" என்று (ஃபிர் அவ்னாகிய) அவன் கூறினான்.

35. "இவர் தன் சூனியத்தைக்கொண்டு, உங்கள் (ஊரான இப்) பூமியை விட்டும் உங்களை வெளியேற்றிவிட நாடுகிறார்; ஆகவே, (இதைப்பற்றி) நீங்கள் (எனக்கு)எதை(ச்செய்ய) ஏவுகிறீர்கள்? (என்று ஃபிர் அவ்ன் கேட்டான்)

36. அ(தற்க)வர்கள், "அவருக்கும், அவருடைய சகோதரருக்கும் தவணை கொடுத்து விடு; மேலும், (சூனியக்காரர்களை) திரட்டிக் கொண்டு வருவோரைப் பல நகரங்களுக்கும் அனுப்பிவை" என்று கூறினார்கள்.

37. "அவர்கள் கற்றறிந்த ஒவ்வொரு சூனியக்காரனையும் உம்மிடம் (அழைத்துக்) கொண்டு வருவார்கள்" (என்று கூறினார்கள்).

38. ஆகவே, (பல நகரங்களுக்கும் திரட்டுவோர் அனுப்பி வைக்கப்பட்டு) குறிப்பிட்ட நாளின், குறித்த நேரத்திற்குச் சூனியக்காரர்கள் யாவரும் ஒன்று சேர்க்கப்பட்டார்கள்.

39. (சகல) மனிதர்களிடமும், (குறித்த நேரத்தில்) நீங்கள் (வந்து) ஒன்று சேருவீர்களா? என்றும் கேட்கப்பட்டது.

40. சூனியக்காரர்களை_அவர்கள் வெற்றி பெற்றவர்களாக ஆகி விட்டால்_ நாம் பின்பற்றக்கூடும் (என்றும் கூறப்பட்டது);

41. ஆகவே, சூனியக்காரர்கள் வந்தபொழுது, அவர்கள் ஃபிர் அவ்னிடம், "நாங்களே மிகைத்தவர்களாகி(வென்று)விட்டால், (அதற்குரிய) கூலி (வெகுமதி) நிச்சயமாக எங்களுக்கு உண்டா?" என்று கேட்டார்கள்.

42. அ(தற்க)வன், "ஆம்! உண்டு. அந்நேரத்தில், நிச்சயமாக நீங்கள் (நம்முடைய சபையிலும்) நமக்கு நெருக்கமாக்கப்பட்டவர்களில் உள்ளவராவீர்கள்" என்று கூறினான்.

43. "நீங்கள் (சூனியம் செய்ய) எதைப்போடக் கூடியவர்களோ போடுங்கள்" என மூஸா அவர்களிடம் கூறினார்.

فَاَلْقَوْا حِبَالَهُمْ وَعِصِيَّهُمْ وَقَالُوْا بِعِزَّةِ فِرْعَوْنَ اِنَّا لَنَحْنُ
الْغٰلِبُوْنَ ﴿٤٤﴾ فَاَلْقٰى مُوْسٰى عَصَاهُ فَاِذَا هِیَ تَلْقَفُ مَا يَاْفِكُوْنَ ﴿٤٥﴾
فَاُلْقِیَ السَّحَرَةُ سٰجِدِيْنَ ﴿٤٦﴾ قَالُوْۤا اٰمَنَّا بِرَبِّ الْعٰلَمِيْنَ ﴿٤٧﴾ رَبِّ مُوْسٰى
وَهٰرُوْنَ ﴿٤٨﴾ قَالَ اٰمَنْتُمْ لَهٗ قَبْلَ اَنْ اٰذَنَ لَكُمْ اِنَّهٗ لَكَبِيْرُكُمُ الَّذِیْ
عَلَّمَكُمُ السِّحْرَ فَلَسَوْفَ تَعْلَمُوْنَ لَاُقَطِّعَنَّ اَيْدِيَكُمْ وَاَرْجُلَكُمْ
مِّنْ خِلَافٍ وَّلَاُصَلِّبَنَّكُمْ اَجْمَعِيْنَ ﴿٤٩﴾ قَالُوْا لَا ضَيْرَ اِنَّاۤ اِلٰى
رَبِّنَا مُنْقَلِبُوْنَ ﴿٥٠﴾ اِنَّا نَطْمَعُ اَنْ يَّغْفِرَ لَنَا رَبُّنَا خَطٰيٰنَاۤ اَنْ كُنَّاۤ اَوَّلَ
الْمُؤْمِنِيْنَ ﴿٥١﴾ وَاَوْحَيْنَاۤ اِلٰى مُوْسٰۤى اَنْ اَسْرِ بِعِبَادِیْۤ اِنَّكُمْ مُّتَّبَعُوْنَ ﴿٥٢﴾ ع ٣
فَاَرْسَلَ فِرْعَوْنُ فِی الْمَدَآئِنِ حٰشِرِيْنَ ﴿٥٣﴾ اِنَّ هٰۤؤُلَآءِ لَشِرْذِمَةٌ
قَلِيْلُوْنَ ﴿٥٤﴾ وَاِنَّهُمْ لَنَا لَغَآئِظُوْنَ ﴿٥٥﴾ وَاِنَّا لَجَمِيْعٌ حٰذِرُوْنَ ﴿٥٦﴾
فَاَخْرَجْنٰهُمْ مِّنْ جَنّٰتٍ وَّعُيُوْنٍ ﴿٥٧﴾ وَّكُنُوْزٍ وَّمَقَامٍ كَرِيْمٍ ﴿٥٨﴾ كَذٰلِكَ
وَاَوْرَثْنٰهَا بَنِیْۤ اِسْرَآءِيْلَ ﴿٥٩﴾ فَاَتْبَعُوْهُمْ مُّشْرِقِيْنَ ﴿٦٠﴾ فَلَمَّا تَرَآءَ
الْجَمْعٰنِ قَالَ اَصْحٰبُ مُوْسٰۤى اِنَّا لَمُدْرَكُوْنَ ﴿٦١﴾ قَالَ كَلَّا اِنَّ مَعِیَ
رَبِّیْ سَيَهْدِيْنِ ﴿٦٢﴾ فَاَوْحَيْنَاۤ اِلٰى مُوْسٰۤى اَنِ اضْرِبْ بِّعَصَاكَ الْبَحْرَ
فَانْفَلَقَ فَكَانَ كُلُّ فِرْقٍ كَالطَّوْدِ الْعَظِيْمِ ﴿٦٣﴾ وَاَزْلَفْنَا ثَمَّ الْاٰخَرِيْنَ ﴿٦٤﴾

44. ஆகவே, தங்களுடைய கயிறுகளையும், தங்களுடைய தடிகளையும் அவர்கள் போட்டார்கள்; "ஃபிர்அவ்னுடைய கௌரவத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக நாமே வெற்றியாளர்கள்" என்றும் கூறினார்கள்.

45. (பிறகு) மூஸா தன் தடியைப் போட்டார்; அப்பொழுது அது அவர்கள் பொய்யாகச் செய்திருந்தவற்றை விழுங்கியது.

46. அப்பொழுது(இதனைக் கண்ட) சூனியக்காரர்கள் சிரம்பணிந்தவர்களாக (க்கீழே) வீழ்த்தப்பட்டனர்_

47."அகிலத்தாரின் இரட்சகனையே நாங்கள் விசுவாசங்கொண்டோம்" என்று கூறினார்கள்_

48."(அவன்தான்) மூஸாவுக்கும், ஹாரூனுக்கும் இரட்சகன்" (என்று கூறினார்கள்).

49. (அதற்கு ஃபிர்அவ்னாகிய) அவன் " நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன்னரே நீங்கள் அவரை விசுவாசித்துவிட்டீர்களா? நிச்சயமாக, உங்களுக்கு சூனியத்தைக் கற்றுக்கொடுத்த உங்களின் பெரியவர் அவர்தான்; அதிசீக்கிரத்தில் (இதன் முடிவை) நீங்கள் அறிந்துகொள்வீர்கள்; திண்ணமாக உங்களுடைய கைகளையும், உங்களுடைய கால்களையும் மாறாக(ஒரு பக்கத்துக்கையையும், மறுபக்கத்துக் காலையும்) நான் துண்டித்து, உங்கள் அனைவரையும் நிச்சயமாக நான் கழுவேற்றிவிடுவேன்" என்று கூறினான்.

50. அ(தற்க)வர்கள்,"(அவ்வாறு செய்வதால்) எங்களுக்கு யாதொரு கெடுதியுமில்லை. (ஏனென்றால்) நிச்சயமாக நாங்கள் எங்கள் இரட்சகன் பக்கமே திரும்பச் செல்லக்கூடியவர்கள்" என்று கூறினார்கள்.

51. "நிச்சயமாக (மூஸாவை) விசுவாசங்கொண்டவர்களில் முதலாமவர்களாக நாங்கள் இருப்பதினால், எங்கள் இரட்சகன் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னித்துவிடுவான் என்று நிச்சயமாக நாங்கள் ஆதரவுவைக்கிறோம்" (என்றும் கூறினார்கள்).

52. இன்னும், மூஸாவுக்கு நாம் வஹீ அறிவித்தோம்: "(இஸ்ராயீலின் மக்களாகிய) என்னுடைய அடியார்களை இரவில் அழைத்துச் செல்வீராக; நிச்சயமாக நீங்கள் பின்தொடரப்படுவோராய் உள்ளீர்கள்."

53. பின்னர், ஃபிர்அவ்ன் பல நகரங்களுக்கும் (ஜனங்களைத் திரட்டுவதற்காக) திரட்டுவோரை அனுப்பிவைத்தான்.

54."நிச்சயமாக (இஸ்ராயீலின் மக்களாகிய) இவர்கள் வெகு சொற்பத்தொகையினர்களான ஒரு கூட்டம்.

55. இன்னும், நிச்சயமாக அவர்கள் நமக்குக்கோபமூட்டுகிறவர்கள்.

56. மேலும்,"நிச்சயமாக நாம் அனைவரும் எச்சரிக்கையுடனிருக்கின்றவர்கள்" (என்று கூறினான்).

57. பின்னர்(அவர்களுடைய) தோட்டங்களிலிருந்தும், நீரூற்றுக்களிலிருந்தும் நாம் அவர்களை வெளியேற்றிவிட்டோம்.

58. இன்னும், (அவர்களுடைய) பொக்கிஷங்களிலிருந்தும், மிகச் சிறந்த தங்குமிடத்திலிருந்தும் (அவர்களை வெளியேற்றினோம்.)

59. அவ்வாறு (வெளியேற்றிவிட்டு) இஸ்ராயீலின் மக்களை அவைகளுக்கு வாரிசாகவும் ஆக்கிவிட்டோம்.

60. சூரியன் உதிக்கும் நேரத்தில் (ஃபிர்அவ்னின் கூட்டத்தாராகிய) அவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்தனர்.

61. இவ்விரு கூட்டத்தினரும் ஒருவரையொருவர் கண்டபோது,"நிச்சயமாக நாம் (அவர்களால்) பிடிபட்டுவிடுபவர்கள்தாம்" என்று மூஸாவுடைய தோழர்கள் கூறினார்கள்.

62. (அதற்கு ) "ஒருபோதும் இல்லை! நிச்சயமாக என்னுடன், என்னுடைய இரட்சகன் இருக்கின்றான்; (இதிலிருந்து ஈடேறும்) வழியை நிச்சயமாக எனக்கு அவன் காட்டுவான்" என்று(மூஸாவாகிய) அவர் கூறினார்.

63. (அப்போது) "நீர் உம்முடைய (கைத்) தடியினால் கடலை அடிப்பீராக" என மூஸாவின்பால் வஹீ அறிவித்தோம் (அவர் அடிக்கவே) அது பிளந்து விட்டது; ஒவ்வொரு பிளவும் பெரும் மலை போன்று ஆகிவிட்டது.

64. (பின்தொடர்ந்த) மற்றவர்களையும் அந்த இடத்தை நெருங்கச்செய்தோம்.

وَاَنْجَيْنَا مُوْسٰى وَمَنْ مَّعَهٗۤ اَجْمَعِيْنَ ﴿٦٥﴾ ثُمَّ اَغْرَقْنَا الْاٰخَرِيْنَ ؕ ﴿٦٦﴾
اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿٦٧﴾ وَاِنَّ رَبَّكَ
لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿٦٨﴾ وَاتْلُ عَلَيْهِمْ نَبَاَ اِبْرٰهِيْمَ ﴿٦٩﴾ اِذْ قَالَ لِاَبِيْهِ وقف لازم ع
وَقَوْمِهٖ مَا تَعْبُدُوْنَ ﴿٧٠﴾ قَالُوْا نَعْبُدُ اَصْنَامًا فَنَظَلُّ لَهَا عٰكِفِيْنَ ﴿٧١﴾
قَالَ هَلْ يَسْمَعُوْنَكُمْ اِذْ تَدْعُوْنَ ﴿٧٢﴾ اَوْ يَنْفَعُوْنَكُمْ اَوْ يَضُرُّوْنَ ﴿٧٣﴾
قَالُوْا بَلْ وَجَدْنَاۤ اٰبَآءَنَا كَذٰلِكَ يَفْعَلُوْنَ ﴿٧٤﴾ قَالَ اَفَرَءَيْتُمْ مَّا
كُنْتُمْ تَعْبُدُوْنَ ﴿٧٥﴾ اَنْتُمْ وَاٰبَآؤُكُمُ الْاَقْدَمُوْنَ ﴿٧٦﴾ فَاِنَّهُمْ عَدُوٌّ
لِّيْۤ اِلَّا رَبَّ الْعٰلَمِيْنَ ﴿٧٧﴾ الَّذِيْ خَلَقَنِيْ فَهُوَ يَهْدِيْنِ ﴿٧٨﴾ وَ
الَّذِيْ هُوَ يُطْعِمُنِيْ وَيَسْقِيْنِ ﴿٧٩﴾ وَاِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِيْنِ ﴿٨٠﴾
وَالَّذِيْ يُمِيْتُنِيْ ثُمَّ يُحْيِيْنِ ﴿٨١﴾ وَالَّذِيْۤ اَطْمَعُ اَنْ يَّغْفِرَ لِيْ
خَطِيْٓـَٔتِيْ يَوْمَ الدِّيْنِ ﴿٨٢﴾ رَبِّ هَبْ لِيْ حُكْمًا وَّاَلْحِقْنِيْ بِالصّٰلِحِيْنَ ﴿٨٣﴾
وَاجْعَلْ لِّيْ لِسَانَ صِدْقٍ فِي الْاٰخِرِيْنَ ﴿٨٤﴾ وَاجْعَلْنِيْ مِنْ
وَّرَثَةِ جَنَّةِ النَّعِيْمِ ﴿٨٥﴾ وَاغْفِرْ لِاَبِيْۤ اِنَّهٗ كَانَ مِنَ الضَّآلِّيْنَ ﴿٨٦﴾
وَلَا تُخْزِنِيْ يَوْمَ يُبْعَثُوْنَ ﴿٨٧﴾ يَوْمَ لَا يَنْفَعُ مَالٌ وَّلَا بَنُوْنَ ﴿٨٨﴾ اِلَّا
مَنْ اَتَى اللّٰهَ بِقَلْبٍ سَلِيْمٍ ﴿٨٩﴾ وَاُزْلِفَتِ الْجَنَّةُ لِلْمُتَّقِيْنَ ﴿٩٠﴾

65. மூஸாவையும், அவருடனிருந்த அனைவரையும் நாம் காப்பாற்றிக் கொண்டோம்.
66. பின்னர், (அவர்களைப் பின்தொடர்ந்த) மற்றவர்களை நாம் மூழ்கடித்துவிட்டோம்.
67. நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கிறது; (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.
68. மேலும், (நபியே!) நிச்சயமாக உமதிரட்சகன் அவனேதான் (யாவரையும்) மிகைத்தோன், மிகக்கிருபையுடையோன்.
69. மேலும், (நபியே!) அவர்களுக்கு இப்றாஹீமுடைய செய்தியையும் ஓதிக் காண்பிப்பீராக!
70. அவர் தன் தந்தையிடமும், தன் சமூகத்தாரிடமும், "நீங்கள் எதை வணங்குகிறீர்கள்?" எனக்கேட்டபோது.
71. அவர்கள், "நாங்கள் சிலைகளை வணங்குகிறோம்; நாங்கள் அவற்றி(ன் வணக்கத்தி)ற்காக நிலைகொண்டுள்ளோம்" என்று கூறினார்கள்.
72. "அவைகளை நீங்கள் அழைக்கின்ற சமயத்தில் உங்களுக்கு அவை (காது கொடுத்து) செவிசாய்க்கின்றனவா?" என்று(இப்றாஹீம் அவர்களிடம்)கேட்டார்.
73. "அல்லது (அவைகளை நீங்கள் வணங்கினால்) உங்களுக்குப் பலன் தருகின்றனவா? அல்லது (வணங்காவிட்டால்) அவை இடையூறு செய்கின்றனவா?" என்றும் கேட்டார்.
74. "இல்லை;எங்கள் மூதாதையர்களை இவ்வாறே செய்பவர்களாக நாங்கள் கண்டோம்" என்று அவர்கள் கூறினார்கள்.
75. "நீங்கள் எவற்றை வணங்கிக் கொண்டிருந்தீர்கள் என்பதை நீங்கள் பார்த்தீர்களா?" (அதுபற்றிச் சொல்லுங்கள் என்று இப்றாஹீமாகிய) அவர் கேட்டார்.
76. நீங்களும், உங்களுடைய முன்னோர்களான மூதாதையர்களும் (எவற்றை வணங்கி வந்தீர்கள் என்பதைப்பாருங்கள்).
77. ஆகவே, "நிச்சயமாக அவைகள் எனக்கு விரோதிகளே! அகிலத்தாரின் இரட்சகனைத்தவிர.
78. "அவன் எத்தகையவனென்றால், என்னைப் படைத்தான்; பின்னர் எனக்கு நேர் வழி காண்பிக்கிறான்."
79. இன்னும் அவன் எத்தகையவனென்றால், "அவனே எனக்கு உணவளிக்கிறான்; அவனே(எனக்கு) குடிக்கவும் தருகிறான்."
80. மேலும், "நான் நோயுற்று விட்டால், அவனே என்னைக் குணப்படுத்துகின்றான்."
81. இன்னும், அவன் எத்தகையவனென்றால்" என்னை இறப்பெய்தச் செய்வான்; பின்னர் என்னை (மறுமையில்)அவன் உயிர்ப்பிப்பான்."
82. இன்னும், அவன் எத்தகையவனென்றால், "கூலி கொடுக்கும் (மறுமை) நாளில், என்னுடைய குற்றங்களை மன்னிக்க அவனையே நான் ஆதரவு வைக்கிறேன்."
83. "என் இரட்சகனே! நீ எனக்கு அறிவை அளிப்பாயாக! மேலும், நல்லோர்களுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக!"
84. "பின்வருபவர்களில் (அவர்கள் என் விஷயத்தில், என்னைப்பற்றி அழகானவற்றைக் கூற) எனக்கு நற்பெயரை ஏற்படுத்துவாயாக."
85. "கொடைகளுடைய சுவனபதிக்கு வாரிசானவர்களிலும் என்னை நீ ஆக்கிவைப்பாயாக!"
86. "என்னுடைய தந்தையையும் நீ மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக அவர் வழிதவறிவிட்டவர்களில்(ஒருவராக) இருக்கிறார்."
87. மேலும், "(படைப்பினங்கள் உயிர் கொடுக்கப்பட்டு) எழுப்பப்படும் (மறுமை)நாளில் நீ என்னை இழிவு படுத்தாதிருப்பாயாக!"
88. செல்வமும், குமாரர்களும் (யாதொரு) பயனளிக்காத(அந்த) நாளில்_
89. (ஆயினும், இணைவைப்பதிலிருந்து நீக்கம் பெற்ற) பரிசுத்தமான இதயத்துடன் (தன் இரட்சகனாகிய) அல்லாஹ்விடம் யார் வந்தாரோ அவர் தவிர (மற்றவருக்குப் பயனளிக்காத நாள்).
90. மேலும், பயபக்தியுடையவர்களுக்கு சொர்க்கம் (மிக) நெருக்கி வைக்கப்படும்.

وَبُرِّزَتِ الْجَحِيْمُ لِلْغٰوِيْنَ ﴿٩١﴾ وَقِيْلَ لَهُمْ اَيْنَمَا كُنْتُمْ تَعْبُدُوْنَ ﴿٩٢﴾
مِنْ دُوْنِ اللّٰهِ ؕ هَلْ يَنْصُرُوْنَكُمْ اَوْ يَنْتَصِرُوْنَ ﴿٩٣﴾ فَكُبْكِبُوْا فِيْهَا
هُمْ وَالْغَاوٗنَ ﴿٩٤﴾ وَجُنُوْدُ اِبْلِيْسَ اَجْمَعُوْنَ ﴿٩٥﴾ قَالُوْا وَهُمْ فِيْهَا
يَخْتَصِمُوْنَ ﴿٩٦﴾ تَاللّٰهِ اِنْ كُنَّا لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ﴿٩٧﴾ اِذْ نُسَوِّيْكُمْ بِرَبِّ
الْعٰلَمِيْنَ ﴿٩٨﴾ وَمَاۤ اَضَلَّنَاۤ اِلَّا الْمُجْرِمُوْنَ ﴿٩٩﴾ فَمَا لَنَا مِنْ شٰفِعِيْنَ ﴿١٠٠﴾
وَلَا صَدِيْقٍ حَمِيْمٍ ﴿١٠١﴾ فَلَوْ اَنَّ لَنَا كَرَّةً فَنَكُوْنَ مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿١٠٢﴾
اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ؕ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿١٠٣﴾ وَاِنَّ رَبَّكَ
لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿١٠٤﴾ كَذَّبَتْ قَوْمُ نُوْحِ ِۨالْمُرْسَلِيْنَ ﴿١٠٥﴾ اِذْ قَالَ لَهُمْ ع ٥ ٢٦ ٩
اَخُوْهُمْ نُوْحٌ اَلَا تَتَّقُوْنَ ﴿١٠٦﴾ اِنِّيْ لَكُمْ رَسُوْلٌ اَمِيْنٌ ﴿١٠٧﴾ فَاتَّقُوا اللّٰهَ وَ
اَطِيْعُوْنِ ﴿١٠٨﴾ وَمَاۤ اَسْئَلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِيَ اِلَّا عَلٰى رَبِّ
الْعٰلَمِيْنَ ﴿١٠٩﴾ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿١١٠﴾ قَالُوْۤا اَنُؤْمِنُ لَكَ وَاتَّبَعَكَ
الْاَرْذَلُوْنَ ﴿١١١﴾ قَالَ وَمَا عِلْمِيْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ ﴿١١٢﴾ اِنْ حِسَابُهُمْ
اِلَّا عَلٰى رَبِّيْ لَوْ تَشْعُرُوْنَ ﴿١١٣﴾ وَمَاۤ اَنَا بِطَارِدِ الْمُؤْمِنِيْنَ ﴿١١٤﴾ اِنْ اَنَا
اِلَّا نَذِيْرٌ مُّبِيْنٌ ﴿١١٥﴾ قَالُوْا لَئِنْ لَّمْ تَنْتَهِ يٰنُوْحُ لَتَكُوْنَنَّ
مِنَ الْمَرْجُوْمِيْنَ ﴿١١٦﴾ قَالَ رَبِّ اِنَّ قَوْمِيْ كَذَّبُوْنِ ﴿١١٧﴾

91. வழிகெட்டோருக்கு (அவர்களுக்கெதிரில்) நரகம் வெளிப்படுத்தப்படும்.

92. அவர்களிடம், நீங்கள் வணங்கிக்கொண்டிருந்தவை எங்கே? எனக் கேட்கப்படும்_

93. அல்லாஹ்வையன்றி _(நீங்கள் வணங்கிவந்த) அவை (இப்போது) உங்களுக்கு உதவி செய்யுமா? அல்லது தங்களுக்குத்தாங்களே உதவி செய்து (தங்களைக் காப்பாற்றிக்) கொள்ளுமா? (என்று கேட்கப்படும்)

94. "ஆகவே, அவைகளும் (அவைகளால்) வழி தவறியவர்களும், முகங்குப்புற (நரகமாகிய) அதில் தள்ளப்படுவார்கள்.

95. இப்லீஸின் சேனைகள் அனைவரும் (அவ்வாறே நரகில் தள்ளப்படுவார்கள்).

96. அவர்களோ (தங்களுக்குள்) அதில் தர்க்கித்துக்கொண்டவர்களாகக் கூறுவார்கள் :

97. "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாங்கள் பகிரங்கமான வழிகேட்டிலிருந்தோம்_

98. "அகிலத்தாரின் இரட்சகனாக இருப்பவனுக்கு (இணையாக்கப்பட்ட) உங்களை நாங்கள் சமமாக ஆக்கிவைத்தபோது_ (பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தோம்)

99. "(இக்) குற்றவாளிகளேயன்றி (வேறு எவரும்) எங்களை வழிகெடுக்கவுமில்லை.

100. ஆகவே, "எங்களுக்குப் பரிந்துரையாளர்களிலிருந்து எவரும் இல்லை.

101. " நெருங்கிய எந்த சிநேகிதனும் இல்லை.

102. "ஆகவே, நிச்சயமாக எங்களுக்கு (உலகிற்குத்) திரும்பிச் செல்லுதல் (என்பது) இருந்தால் விசுவாசங்கொண்டோர்களில் நாங்கள் ஆகிவிடுவோம்" (என்று பிதற்றுவார்கள்)

103. நிச்சயமாக இதில் ஒரு படிப்பினை இருக்கின்றது; (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் (இதனை) விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.

104. மேலும், (நபியே!) நிச்சயமாக உம்முடைய இரட்சகன்_ அவனே திட்டமாக (யாவரையும்) மிகைத்தோன், மிகக் கிருபையுடையோன்.

105. நூஹ்வுடைய சமூகத்தார் (நம்மால் அனுப்பப்பட்ட) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

106. அவர்களுடைய சகோதரர் நூஹ் அவர்களிடம் "நீங்கள் (அல்லாஹ்வுக்கு) பயப்பட மாட்டீர்களா? எனக் கூறியபோது,

107. நிச்சயமாக நான் உங்களுக்கு (அல்லாஹ்வினால்) அனுப்பப்பட்ட மிக்க நம்பிக்கைக்குரிய ஒரு தூதனாவேன்_

108. " ஆகவே, அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து கொள்ளுங்கள்; இன்னும், எனக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடங்கள்".

109. (இதற்காக) "நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை; என்னுடைய கூலி அகிலத்தாரின் இரட்சகனின் மீதே தவிர (வேறு எவரிடமிருந்தும்) இல்லை".

110. "ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்" (என்று கூறினார்).

111. அ(தற்க)வர்கள்" (எங்களில் தரத்தால்) மிகத்தாழ்ந்தவர்கள் உம்மைப் பின்பற்றியிருக்கின்ற நிலையில் உம்மை நாங்கள் விசுவாசிப்போமா?" என்று கூறினார்கள்.

112. (அதற்கு) அவர், "அவர்கள் செய்து கொண்டிருப்பவைபற்றி எனக்கு என்ன தெரியும்?" என்று கூறினார்.

113. ("அவைபற்றிய) அவர்களின் கணக்கு என் இரட்சகன் மீதே தவிர (என்மீது கடமை) இல்லை (இதுபற்றி) நீங்கள் உணருபவர்களாக இருப்பின்" (அவர்களை இழித்துக்கூறி இருக்கமாட்டீர்கள்).

114. "விசுவாசங்கொண்டோரை நான் விரட்டிவிடுபவனுமல்லன்."

115. "நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனேதவிர (வேறு) இல்லை" (என்றும் கூறினார்).

116. அ(தற்க)வர்கள், " நூஹே! நீர் (இவ்வாறு கூறுவதிலிருந்து) விலகிக்கொள்ளவில்லையானால், (கல்லால்) எறியப்படுபவர்களில் (ஒருவராக) நிச்சயமாக நீர் ஆகிவிடுவீர்" என்று கூறினார்கள்.

117. அ(தற்க)வர், "என் இரட்சகனே ! நிச்சயமாக என்னுடைய சமூகத்தார் என்னைப் பொய்யாக்கிவிட்டார்கள்" என்று கூறினார்.

فَافْتَحْ بَيْنِيْ وَبَيْنَهُمْ فَتْحًا وَّنَجِّنِيْ وَمَنْ مَّعِيَ مِنَ الْمُؤْمِنِيْنَ ﴿١١٨﴾ النصف
فَاَنْجَيْنٰهُ وَمَنْ مَّعَهٗ فِي الْفُلْكِ الْمَشْحُوْنِ ﴿١١٩﴾ ثُمَّ اَغْرَقْنَا بَعْدُ
الْبٰقِيْنَ ﴿١٢٠﴾ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ۭ وَمَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿١٢١﴾ وَ
اِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿١٢٢﴾ كَذَّبَتْ عَادُ ِۨ الْمُرْسَلِيْنَ ﴿١٢٣﴾ اِذْ ع ٦ ١٨ ١٠
قَالَ لَهُمْ اَخُوْهُمْ هُوْدٌ اَلَا تَتَّقُوْنَ ﴿١٢٤﴾ اِنِّيْ لَكُمْ رَسُوْلٌ اَمِيْنٌ ﴿١٢٥﴾
فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿١٢٦﴾ وَمَآ اَسْـَٔـلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ ۚ اِنْ اَجْرِيَ
اِلَّا عَلٰي رَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٢٧﴾ اَتَبْنُوْنَ بِكُلِّ رِيْعٍ اٰيَةً تَعْبَثُوْنَ ﴿١٢٨﴾ وَ
تَتَّخِذُوْنَ مَصَانِعَ لَعَلَّكُمْ تَخْلُدُوْنَ ﴿١٢٩﴾ وَاِذَا بَطَشْتُمْ بَطَشْتُمْ
جَبَّارِيْنَ ﴿١٣٠﴾ فَاتَّقُوا اللّٰهَ وَاَطِيْعُوْنِ ﴿١٣١﴾ وَاتَّقُوا الَّذِيْٓ اَمَدَّكُمْ بِمَا
تَعْلَمُوْنَ ﴿١٣٢﴾ اَمَدَّكُمْ بِاَنْعَامٍ وَّبَنِيْنَ ﴿١٣٣﴾ وَجَنّٰتٍ وَّعُيُوْنٍ ﴿١٣٤﴾ اِنِّيْٓ
اَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ ﴿١٣٥﴾ قَالُوْا سَوَاۗءٌ عَلَيْنَآ اَوَعَظْتَ
اَمْ لَمْ تَكُنْ مِّنَ الْوٰعِظِيْنَ ﴿١٣٦﴾ اِنْ هٰذَآ اِلَّا خُلُقُ الْاَوَّلِيْنَ ﴿١٣٧﴾ وَمَا
نَحْنُ بِمُعَذَّبِيْنَ ﴿١٣٨﴾ فَكَذَّبُوْهُ فَاَهْلَكْنٰهُمْ ۭ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً ۭ وَ
مَا كَانَ اَكْثَرُهُمْ مُّؤْمِنِيْنَ ﴿١٣٩﴾ وَاِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيْزُ الرَّحِيْمُ ﴿١٤٠﴾ ع ٧ ١٩ ١١
كَذَّبَتْ ثَمُوْدُ الْمُرْسَلِيْنَ ﴿١٤١﴾ اِذْ قَالَ لَهُمْ اَخُوْهُمْ صٰلِحٌ اَلَا تَتَّقُوْنَ ﴿١٤٢﴾

118. " ஆதலால், எனக்கிடையிலும், அவர்களுக்கிடையிலும் நீ ஒரு தீர்ப்புச் செய்வாயாக! என்னையும், விசுவாசங்கொண்டவர்களில் என்னுடன் உள்ளவர்களையும் காப்பாற்றுவாயாக" (என்று பிரார்த்தித்தார்.)

119. ஆகவே, அவரையும் (விசுவாசங்கொண்டவர்களாக) அவருடன் இருந்தவர்களையும் (மற்ற ஜீவராசிகளால்) நிறைக்கப்பட்டிருந்த கப்பலில் (ஏற்றிக்) நாம் காப்பாற்றினோம்.

120. பின்னர் எஞ்சியிருந்தவர்களை அப்பால் நாம் மூழ்கடித்துவிட்டோம்.

121. நிச்சயமாக இதில் ஒரு படிப்பினை இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்பவர்களாக இருக்கவுமில்லை.

122. மேலும், நிச்சயமாக (நபியே!) உமதிரட்சகன் (அவனை நிராகரித்தவரை தண்டனை செய்வதில் யாவரையும்) அவன்தான் மிகைத்தவன்; மிகக்கிருபையுடையவன்.

123. ஆது (கூட்டத்தார் நம்முடைய) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

124. அவர்களுடைய சகோதரர் ஹூது அவர்களிடம், " நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயப்படமாட்டீர்களா" என்று கூறியபோது,

125. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன்".

126. "ஆகவே நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்".

127. " இதற்காக உங்களிடத்தில் யாதொரு கூலியையும் நான் கேட்கவில்லை; என்னுடைய கூலி(யாவும்) அகிலத்தாரின் இரட்சகனின் மீதே தவிர (வேறு எவரிடமிருந்தும்) இல்லை".

128. ஒவ்வொரு உயர்ந்த இடத்திலும் வீண்வேலை செய்கிறவர்களாக அடையாளமிடப்பட்ட கட்டிடங்களைக் கட்டுகிறீர்களா?

129. இன்னும், "நீங்கள் நிரந்தரமாக இருந்துவிடலாம் என்பதற்காக உயர்ந்த மாளிகைகளை ஆக்கிக்கொள்கிறீர்களா?"

130. மேலும், " (எவரையேனும் ஏதுங்குற்றத்திற்காக) நீங்கள் பிடித்தால் (கொடூரமாக) மிக்க கொடுமையாளர்களின் பிடியாகப் பிடிக்கிறீர்கள்."

131. ஆகவே, "நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; எனக்குக் கீழ்ப்படிந்தும் நடங்கள்."

132. " நீங்கள் அறிந்திருப்பவற்றைக் கொண்டு உங்களுக்கு(க் கொடுத்து) உதவி புரிந்திருக்கிறானே அத்தகையவனை நீங்கள் பயந்துகொள்ளுங்கள்".

133. "(ஆடு, மாடு,ஒட்டகங்கள் போன்ற) கால் நடைகளையும், ஆண்மக்களையும் உங்களுக்கு (க் கொடுத்து) அவன் உதவி செய்திருக்கிறான்_

134. "இன்னும் தோட்டங்களையும், நீரூற்றுகளையும் கொண்டு (அவன் உதவியளித்துள்ளான்).

135. (அவனுக்கு நீங்கள் மாறு செய்தால்) "நிச்சயமாக நான் மகத்தானதொரு நாளின் வேதனையை (அது உங்களுக்கு வரும் என்பது பற்றி) பயப்படுகிறேன்" என்று கூறினார்.

136. அ(தற்க)வர்கள் "நீர் எங்களுக்கு உபதேசம் செய்தாலும், உபதேசம் செய்பவர்களில் நீர் இல்லாமலிருந்தாலும் சமம் தான் (நாங்கள் எங்கள் வழியிலிருந்து திரும்பப்போவதில்லை) என்று கூறினார்கள்.

137. இது முன்னவர்களின் வழக்கமே தவிர (வேறு) இல்லை.

138. இன்னும், " நாங்கள் (உம் கூற்றுப்படி) வேதனை செய்யப்படுவர்களும் அல்லர்" (என்றும் கூறினர்).

139. எனவே, அவர்கள் அவரைப் பொய்யாக்கினார்கள்; ஆகவே, நாம் அவர்களை அழித்துவிட்டோம். நிச்சயமாக இதில் ஓர் அத்தாட்சி இருக்கிறது; இன்னும், அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்பவர்களாக இருக்கவில்லை.

140. மேலும், (நபியே!) உமதிரட்சகன் _ அவன் தான் (சகலரையும்) மிகைத்தவன், மிகக் கிருபையுடையவன்.

141. ஸமூது (கூட்டத்தார் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட) தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

142. அவர்களுடைய சகோதரர் (நபியாகிய) ஸாலிஹ் அவர்களிடம், " நீங்கள் (அல்லாஹ்வை) பயந்துகொள்ளமாட்டீர்களா"? எனக் கூறியபோது (அவரை அவர்கள் பொய்யாக்கினார்கள்.)

إِنِّي لَكُمْ رَسُولٌ أَمِينٌ ﴿١٤٣﴾ فَاتَّقُوا اللَّهَ وَأَطِيعُونِ ﴿١٤٤﴾ وَمَا أَسْأَلُكُمْ عَلَيْهِ
مِنْ أَجْرٍ إِنْ أَجْرِيَ إِلَّا عَلَىٰ رَبِّ الْعَالَمِينَ ﴿١٤٥﴾ أَتُتْرَكُونَ فِي مَا هَاهُنَا
آمِنِينَ ﴿١٤٦﴾ فِي جَنَّاتٍ وَعُيُونٍ ﴿١٤٧﴾ وَزُرُوعٍ وَنَخْلٍ طَلْعُهَا هَضِيمٌ ﴿١٤٨﴾
وَتَنْحِتُونَ مِنَ الْجِبَالِ بُيُوتًا فَارِهِينَ ﴿١٤٩﴾ فَاتَّقُوا اللَّهَ وَأَطِيعُونِ ﴿١٥٠﴾
وَلَا تُطِيعُوا أَمْرَ الْمُسْرِفِينَ ﴿١٥١﴾ الَّذِينَ يُفْسِدُونَ فِي الْأَرْضِ وَ
لَا يُصْلِحُونَ ﴿١٥٢﴾ قَالُوا إِنَّمَا أَنْتَ مِنَ الْمُسَحَّرِينَ ﴿١٥٣﴾ مَا أَنْتَ إِلَّا بَشَرٌ
مِثْلُنَا فَأْتِ بِآيَةٍ إِنْ كُنْتَ مِنَ الصَّادِقِينَ ﴿١٥٤﴾ قَالَ هَٰذِهِ نَاقَةٌ
لَهَا شِرْبٌ وَلَكُمْ شِرْبُ يَوْمٍ مَعْلُومٍ ﴿١٥٥﴾ وَلَا تَمَسُّوهَا بِسُوءٍ فَيَأْخُذَكُمْ
عَذَابُ يَوْمٍ عَظِيمٍ ﴿١٥٦﴾ فَعَقَرُوهَا فَأَصْبَحُوا نَادِمِينَ ﴿١٥٧﴾ فَأَخَذَهُمُ
الْعَذَابُ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً وَمَا كَانَ أَكْثَرُهُمْ مُؤْمِنِينَ ﴿١٥٨﴾
وَإِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيزُ الرَّحِيمُ ﴿١٥٩﴾ كَذَّبَتْ قَوْمُ لُوطٍ الْمُرْسَلِينَ ﴿١٦٠﴾ ع ٨ ٩ ١٢
إِذْ قَالَ لَهُمْ أَخُوهُمْ لُوطٌ أَلَا تَتَّقُونَ ﴿١٦١﴾ إِنِّي لَكُمْ رَسُولٌ أَمِينٌ ﴿١٦٢﴾
فَاتَّقُوا اللَّهَ وَأَطِيعُونِ ﴿١٦٣﴾ وَمَا أَسْأَلُكُمْ عَلَيْهِ مِنْ أَجْرٍ إِنْ أَجْرِيَ
إِلَّا عَلَىٰ رَبِّ الْعَالَمِينَ ﴿١٦٤﴾ أَتَأْتُونَ الذُّكْرَانَ مِنَ الْعَالَمِينَ ﴿١٦٥﴾ وَ
تَذَرُونَ مَا خَلَقَ لَكُمْ رَبُّكُمْ مِنْ أَزْوَاجِكُمْ بَلْ أَنْتُمْ قَوْمٌ عَادُونَ ﴿١٦٦﴾

143. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன்.

144. "எனவே, நீங்கள் அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்;"

145." இதற்காக உங்களிடத்தில் யாதொரு கூலியையும் நான்கேட்கவில்லை;என்னுடைய கூலி(யாவும்) அகிலத்தாரின் இரட்சகனின் மீதே தவிர (வேறு எவரிடமிருந்தும்) இல்லை.

146."இங்குள்ள (சுகபோகங்களான)வற்றில் அச்சமற்றவர்களாக (இருக்க) நீங்கள் விட்டு வைக்கப்படுவீர்களா?"

147."தோட்டங்களில், இன்னும் நீரூற்றுக்களில்_

148."வேளாண்மைகளிலும்,(மிருதுவான ஈரமுள்ள பழங்களைத்தாங்கியதாக) அவற்றின் குலைகள் இருக்கும் பேரீச்ச மரங்களிலும்" (ஆகியவற்றிலெல்லாம் நீங்கள் அச்சமற்றிருக்க விட்டுவைக்கப்படுவீர்களா?).

149. இன்னும், மிகத்திறமைசாலிகளாக (ஆணவம் கொண்டவர்களாக) மலைகளில் வீடுகளைக் குடைந்து (அமைத்துக்) கொள்கிறீர்கள்."

150. "ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள்; இன்னும் எனக்குக் கீழ்ப்படியுங்கள்."

151. "மேலும், வரம்பு மீறுவோரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள்."

152. அவர்கள் எத்தகையோரென்றால், பூமியில் குழப்பம் செய்வார்கள்; இன்னும் சீர்திருத்தம் செய்யமாட்டார்கள் (என்றெல்லாம் ஸாலிஹ் நபி கூறியதற்கு),

153. அவர்கள் (ஸாலிஹே!)"நிச்சயமாக நீரோ சூனியம் செய்யப்பட்டவர்களில் உள்ளவர்" என்று கூறினார்கள்.

154. " நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதரேதவிர (வேறு)இல்லை; ஆகவே, உண்மையாளர்களில் நீர் இருந்தால் (நாங்கள் வேண்டியவாறு) ஓர் அத்தாட்சியைக் கொண்டு வாரும்" (என்று கூறினார்கள்).

155. அ(தற்க)வர் (அத்தாட்சியாக) "இதோ ஒரு பெண் ஒட்டகம் (குறிப்பிட்ட நாளில் கிணற்றிலிருந்து) இதற்கு தண்ணீர் அருந்தும் பங்கும், (அதுபோன்று) உங்களுக்கு குறிப்பிட்ட ஒருநாள் தண்ணீர் அருந்தும் பங்கும் உண்டு" என்று கூறினார்.

156. அன்றியும் "நீங்கள் எந்தத்தீங்கைக் கொண்டும் அதனைத் தீண்டாதீர்கள்;(அவ்வாறு தீண்டினால்,) மகத்தான நாளின் வேதனை உங்களைப் பிடித்துக்கொள்ளும்" (என்று கூறினார்).

157.(இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும் அதன் குதிகால் நரம்பினைத் தறித்து) அவர்கள் அதை அறுத்துவிட்டார்கள்;பின்னர் கைசேதப்பட்டோராய் ஆகிவிட்டனர்.

158. எனவே, வேதனை அவர்களைப் பிடித்துக்கொண்டது; நிச்சயமாக இதிலோர் அத்தாட்சி இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங் கொள்பவர்களாக இருக்கவுமில்லை.

159.மேலும், நிச்சயமாக (நபியே!) உமதிரட்சகன், அவன்தான் (யாவரையும்) மிகைத்தவன்; மிகக்கிருபையுடையவன்.

160. (நபி) லூத்துடைய சமூகத்தார் தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

161. அவர்களுடைய சகோதரர் லூத் அவர்களிடம், " நீங்கள் (அல்லாஹ்வை) பயந்து கொள்ளமாட்டீர்களா?" என்று கூறிய போது,

162. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதனாவேன்_

163. "ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள்.

164."இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை;என்னுடைய கூலி (யாவும்) அகிலத்தாரின் இரட்சகனின் மீதல்லாது (வேறு எவரின் மீதும்) இல்லை.

165."(தீய காரியத்திற்காக) அகிலத்தாரில் ஆடவர்களிடம் வருகின்றீர்களா?

166. " உங்கள் இரட்சகன் உங்களின் மனைவியரிலிருந்து உங்களுக்கெனப் படைத்ததையும் நீங்கள் விட்டுவிடுகிறீர்கள்; இல்லை! நீங்கள் (அல்லாஹ்வின்) வரம்பைக்கடந்த சமூகத்தவர்கள்" (என்றும் கூறினார்).

قَالُوا لَئِن لَّمْ تَنتَهِ يَا لُوطُ لَتَكُونَنَّ مِنَ الْمُخْرَجِينَ ﴿١٦٧﴾ قَالَ إِنِّي
لِعَمَلِكُم مِّنَ الْقَالِينَ ﴿١٦٨﴾ رَبِّ نَجِّنِي وَأَهْلِي مِمَّا يَعْمَلُونَ ﴿١٦٩﴾ فَنَجَّيْنَاهُ وَ
أَهْلَهُ أَجْمَعِينَ ﴿١٧٠﴾ إِلَّا عَجُوزًا فِي الْغَابِرِينَ ﴿١٧١﴾ ثُمَّ دَمَّرْنَا الْآخَرِينَ ﴿١٧٢﴾
وَأَمْطَرْنَا عَلَيْهِم مَّطَرًا فَسَاءَ مَطَرُ الْمُنذَرِينَ ﴿١٧٣﴾ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً
وَمَا كَانَ أَكْثَرُهُم مُّؤْمِنِينَ ﴿١٧٤﴾ وَإِنَّ رَبَّكَ لَهُوَ الْعَزِيزُ الرَّحِيمُ ﴿١٧٥﴾ ع ٩ ١٦ ١٣
كَذَّبَ أَصْحَابُ لْـَٔيْكَةِ الْمُرْسَلِينَ ﴿١٧٦﴾ إِذْ قَالَ لَهُمْ شُعَيْبٌ أَلَا
تَتَّقُونَ ﴿١٧٧﴾ إِنِّي لَكُمْ رَسُولٌ أَمِينٌ ﴿١٧٨﴾ فَاتَّقُوا اللَّهَ وَأَطِيعُونِ ﴿١٧٩﴾
وَمَا أَسْأَلُكُمْ عَلَيْهِ مِنْ أَجْرٍ إِنْ أَجْرِيَ إِلَّا عَلَىٰ رَبِّ الْعَالَمِينَ ﴿١٨٠﴾
أَوْفُوا الْكَيْلَ وَلَا تَكُونُوا مِنَ الْمُخْسِرِينَ ﴿١٨١﴾ وَزِنُوا بِالْقِسْطَاسِ
الْمُسْتَقِيمِ ﴿١٨٢﴾ وَلَا تَبْخَسُوا النَّاسَ أَشْيَاءَهُمْ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ
مُفْسِدِينَ ﴿١٨٣﴾ وَاتَّقُوا الَّذِي خَلَقَكُمْ وَالْجِبِلَّةَ الْأَوَّلِينَ ﴿١٨٤﴾
قَالُوا إِنَّمَا أَنتَ مِنَ الْمُسَحَّرِينَ ﴿١٨٥﴾ وَمَا أَنتَ إِلَّا بَشَرٌ مِّثْلُنَا وَ
إِن نَّظُنُّكَ لَمِنَ الْكَاذِبِينَ ﴿١٨٦﴾ فَأَسْقِطْ عَلَيْنَا كِسَفًا مِّنَ السَّمَاءِ
إِن كُنتَ مِنَ الصَّادِقِينَ ﴿١٨٧﴾ قَالَ رَبِّي أَعْلَمُ بِمَا تَعْمَلُونَ ﴿١٨٨﴾ فَكَذَّبُوهُ
فَأَخَذَهُمْ عَذَابُ يَوْمِ الظُّلَّةِ إِنَّهُ كَانَ عَذَابَ يَوْمٍ عَظِيمٍ ﴿١٨٩﴾

167. அ(தற்க)வர்கள், "லூத்தே! (இவ்வாறு உபதேசிப்பதிலிருந்து) நீர் விலகிக்கொள்ளாவிடில், நிச்சயமாக நீர் (ஊரிலிருந்து) வெளியேற்றப்பட்டவர்களில் ஆகிவிடுவீர்" என்று கூறினார்கள்.

168. அ(தற்க)வர் "நிச்சயமாக நான் உங்களுடைய (இத்தீச்)செயலை வெறுப்பவர்களில் உள்ளவனாவேன்" என்று கூறினார்.

169. "என் இரட்சகனே!என்னையும் என் குடும்பத்தாரையும் இவர்கள் செய்து கொண்டிருப்பவற்றிலிருந்து(ம் அதன் தண்டனையிலிருந்தும்) காப்பாற்றுவாயாக" (என்று பிரார்த்தித்தார்).

170. ஆகவே அவரையும், அவர் குடும்பத்தினர் அனைவரையும் நாம் காப்பாற்றினோம்.

171. (தண்டிக்கப்படுபவர்களோடு) எஞ்சியிருப்போரில் ஆகிவிட்ட ஒரு கிழவி(யான அவர் மனைவி)யைத் தவிர.

172. பின்னர், மற்றவர்களை (அடியோடு) நாம் அழித்துவிட்டோம்.

173. இன்னும், அவர்கள் மீது நாம், (கல்)மாரியை பொழியச் செய்தோம்; ஆகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்ட (அ)வர்களின் (மீது பொழியச்செய்த கல்) மாரி கெட்டதாகி விட்டது.

174. நிச்சயமாக இதிலோர் அத்தாட்சி இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்பவர்களாக இருக்கவுமில்லை.

175. (நபியே!) இன்னும், நிச்சயமாக உமதிரட்சகன் _ அவனே (யாவரையும்) மிகைத்தவன்; பெருங்கிருபையுடையவன்.

176. (மரங்கள் அடர்ந்த பகுதியில் மத்யன் என்னும் ஊரில் வாழ்ந்த) தோப்புவாசிகளும் தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.

177. (நபியாகிய) ஷுஐப், அவர்களிடம் " நீங்கள் (அல்லாஹ்வை) பயப்பட மாட்டீர்களா?" என்று கூறிய போது _(அவரை அவர்கள் பொய்யாக்கினார்கள்)

178. "நிச்சயமாக நான் உங்களுக்கு நம்பிக்கைக்குரிய தூதராவேன்".

179. "அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள்; இன்னும், எனக்குக் கீழ்ப்படிந்துநடங்கள்."

180. " இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை; என்னுடைய கூலி(யாவும்) அகிலத்தாரின் இரட்சகன் மீதே தவிர(வேறு எவரின் மீதும்) இல்லை."

181. " அளவையைப் பூரணமாக்குங்கள்; (அளவைக்குறைத்து ஜனங்களுக்கு) நஷ்டமிழைப் போராகவும் நீங்கள் ஆகிவிடாதீர்கள்."

182. மேலும், " சரியான தராசு கொண்டு நிறுங்கள்".

183. "மனிதர்களுக்கு அவர்களின் பொருள்களை நீங்கள் குறைத்தும்விடாதீர்கள்; நீங்கள் பூமியில் குழப்பம் செய்கிறவர்களாகவும் அலையாதீர்கள்."

184. மேலும், "உங்களையும், (உங்களுக்கு) முன்னவர்களான படைப்பினரையும் எவன் படைத்தானோ அத்தகையவனை நீங்கள் பயப்படுங்கள்" (என்றும் கூறினார்).

185. அ(தற்க)வர்கள், "நீரோ சூனியம் செய்யப்பட்டவர்களில் உள்ளவர்" என்று கூறினார்கள்.

186. மேலும், " நீர் எங்களைப் போன்ற ஒரு மனிதரேதவிர (வேறு) இல்லை;இன்னும், நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யர்களில் உள்ளவராக எண்ணுகிறோம்.

187. " எனவே, நீர் உண்மையாளர்களில் உள்ளவராக இருந்தால் வானத்திலிருந்து பல துண்டுகளை எங்களின் மீது விழச்செய்வீராக" (என்றும் கூறினார்கள்).

188. அ(தற்க)வர், " நீங்கள் செய்துகொண்டிருப்பவற்றை என் இரட்சகன் மிக்க அறிந்தவன்" என்று கூறினார்.

189. பின்னரும், அவர்கள் அவரைப் பொய்யாக்கினார்கள்; ஆகவே (அடர்ந்திருண்ட மேகங்களின்) நிழலுடைய நாளின் வேதனை அவர்களைப் பிடித்துக்கொண்டது; நிச்சயமாக அது மகத்தான(கடினமான) நாளின் வேதனையாக இருந்தது.

إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً ۖ وَمَا كَانَ أَكْثَرُهُم مُّؤْمِنِينَ ﴿١٩٠﴾ وَإِنَّ رَبَّكَ
ع ١٠ / ١٣ لَهُوَ الْعَزِيزُ الرَّحِيمُ ﴿١٩١﴾ وَإِنَّهُ لَتَنزِيلُ رَبِّ الْعَالَمِينَ ﴿١٩٢﴾ نَزَلَ بِهِ
الرُّوحُ الْأَمِينُ ﴿١٩٣﴾ عَلَىٰ قَلْبِكَ لِتَكُونَ مِنَ الْمُنذِرِينَ ﴿١٩٤﴾ بِلِسَانٍ
عَرَبِيٍّ مُّبِينٍ ﴿١٩٥﴾ وَإِنَّهُ لَفِي زُبُرِ الْأَوَّلِينَ ﴿١٩٦﴾ أَوَلَمْ يَكُن لَّهُمْ آيَةً أَن
يَعْلَمَهُ عُلَمَاءُ بَنِي إِسْرَائِيلَ ﴿١٩٧﴾ وَلَوْ نَزَّلْنَاهُ عَلَىٰ بَعْضِ الْأَعْجَمِينَ ﴿١٩٨﴾
فَقَرَأَهُ عَلَيْهِم مَّا كَانُوا بِهِ مُؤْمِنِينَ ﴿١٩٩﴾ كَذَٰلِكَ سَلَكْنَاهُ فِي قُلُوبِ
الْمُجْرِمِينَ ﴿٢٠٠﴾ لَا يُؤْمِنُونَ بِهِ حَتَّىٰ يَرَوُا الْعَذَابَ الْأَلِيمَ ﴿٢٠١﴾ فَيَأْتِيَهُم
بَغْتَةً وَهُمْ لَا يَشْعُرُونَ ﴿٢٠٢﴾ فَيَقُولُوا هَلْ نَحْنُ مُنظَرُونَ ﴿٢٠٣﴾
أَفَبِعَذَابِنَا يَسْتَعْجِلُونَ ﴿٢٠٤﴾ أَفَرَأَيْتَ إِن مَّتَّعْنَاهُمْ سِنِينَ ﴿٢٠٥﴾ ثُمَّ
جَاءَهُم مَّا كَانُوا يُوعَدُونَ ﴿٢٠٦﴾ مَا أَغْنَىٰ عَنْهُم مَّا كَانُوا يُمَتَّعُونَ ﴿٢٠٧﴾
وَمَا أَهْلَكْنَا مِن قَرْيَةٍ إِلَّا لَهَا مُنذِرُونَ ﴿٢٠٨﴾ ذِكْرَىٰ وَمَا كُنَّا مع ٩ عند المتقدمین ١٢
ظَالِمِينَ ﴿٢٠٩﴾ وَمَا تَنَزَّلَتْ بِهِ الشَّيَاطِينُ ﴿٢١٠﴾ وَمَا يَنبَغِي لَهُمْ وَمَا
يَسْتَطِيعُونَ ﴿٢١١﴾ إِنَّهُمْ عَنِ السَّمْعِ لَمَعْزُولُونَ ﴿٢١٢﴾ فَلَا تَدْعُ مَعَ
اللَّهِ إِلَٰهًا آخَرَ فَتَكُونَ مِنَ الْمُعَذَّبِينَ ﴿٢١٣﴾ وَأَنذِرْ عَشِيرَتَكَ
الْأَقْرَبِينَ ﴿٢١٤﴾ وَاخْفِضْ جَنَاحَكَ لِمَنِ اتَّبَعَكَ مِنَ الْمُؤْمِنِينَ ﴿٢١٥﴾

190. நிச்சயமாக இதிலோர் அத்தாட்சி இருக்கிறது; அவர்களில் பெரும்பாலோர் விசுவாசங்கொள்வோராக இருக்கவுமில்லை.

191. மேலும், நிச்சயமாக (நபியே!) உமதிரட்சகன் — அவன்தான் (யாவரையும்) மிகைத்தவன், மிகக்கிருபையுடையவன்.

192. மேலும், (நபியே!) நிச்சயமாக (குர்ஆனாகிய) இது அகிலத்தாரின் இரட்சகனால் இறக்கிவைக்கப்பட்டதாகும்.

193. (அல்லாஹ்வின் கட்டளைப்படி) ரூஹுல் அமீன் (எனும் ஜிப்ரீல்) இதனைக்கொண்டு இறங்கினார் —

194. அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களில் (ஒருவராக) நீர் ஆவதற்காக உமது இதயத்தின் மீது (கூடுதல் குறைவின்றி இதைக் கொண்டு இறங்கினார்)

195. தெளிவான அரபி மொழியைக்கொண்டு (இறங்கினார்).

196. நிச்சயமாக (குர்ஆனாகிய) இது (பற்றிய அறிவிப்பு) முந்தயவர்களின் (வேத) நூல்களிலும் (கூறப்பட்டு) உள்ளது.

197. இஸ்ராயீலின் மக்களிலுள்ள அறிஞர்கள் இதனை அறிந்திருப்பது, அவர்களுக்குப் (போதுமான) அத்தாட்சியாக இருக்கவில்லையா?

198. நாம் (குர்ஆனாகிய) இதை அரபியல்லாத சிலரின் மீது இறக்கிவைத்திருப்போமாயின்;

199. பின்னர், அவர்(கள்) இதை அவர்களுக்கு ஓதிக்காட்டினாலும் இதனை அவர்கள் விசுவாசம் கொள்கிறவர்களாக இல்லை.

200. இவ்வாறே இதனை (இக்) குற்றவாளிகளின் இதயங்களில் நாம் புகுத்திவிட்டோம்.

201. (ஆகவே!) துன்புறுத்தும் வேதனையை அவர்கள் (கண்கூடாகக்) காணும் வரை, இதனைக் கொண்டு அவர்கள் விசுவாசிக்கமாட்டார்கள்.

202. ஆகவே, அ(த் தண்டனையான)து அவர்கள் உணர்ந்து கொள்ளாதிருக்கும் நிலையில், திடீரென அவர்களிடம் வரும்.

203. அது சமயம் அவர்கள் " நாங்கள் (சிறிது) அவகாசம் கொடுக்கப்படுவோரா?" என்று கேட்பார்கள்.

204. "நம்முடைய வேதனைக்காகவா அவர்கள் அவசரப்படுகிறார்கள்?

205. (நபியே!) நீர் பார்த்தீரா? நாம் இவர்களை (இவர்கள் இஷ்டப்பட்டவாறு) பல வருடங்கள் சுகமனுபவிக்கச் செய்திருந்தால் —

206. பின்னர் அவர்கள் வாக்களிக்கப்படுபவர்களாக இருந்தார்களே அ(வ்வேதனையான)து அவர்களுக்கு வந்துவிட்டால் —

207. அவர்கள் சுகமனுபவிக்கச்செய்யப்பட்டிருந்தவை அவர்களுக்கு யாதொரு பயனும்தராது.

208. எந்த ஊ(ரா)ரையும், அதற்கு அச்சமூட்டிஎச்சரிப்பவர்கள் இல்லாது நாம் அழித்துவிடவில்லை.

209. (அவர்களுக்கு) நினைவூட்டவே (எச்சரிக்கையாளர்களை நாம் அனுப்பினோம்) இன்னும் (எவருக்கும்) அநியாயம் செய்பவர்களாகவும் நாம் இருக்கவில்லை.

210. இன்னும், (குர்ஆனாகிய) இ(வ்வேதத்)தைக் கொண்டு ஷைத்தான்கள் இறங்கவில்லை.

211. மேலும், (அது) அவர்களுக்குத் தகுதியுமன்று; அவர்கள் (அதற்கு) சக்தி பெறவும்மாட்டார்கள்.

212. நிச்சயமாக அவர்கள் செவியேற்பதிலிருந்தும் தடுக்கப்பட்டவர்களாவர்.

213. எனவே, அல்லாஹ்வுடன் வேறோர் நாயனை நீர் அழைக்காதீர்; (அவ்வாறு அழைத்தால்) அதனால் நீர் வேதனை செய்யப்படுபவர்களில் (உள்ளவராக) ஆகிவிடுவீர்.

214. இன்னும் நீர் உம்முடைய நெருங்கிய உறவினர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!

215. இன்னும் விசுவாசிகளில் உம்மைப்பின்பற்றியோருக்கு உம்முடைய (அன்பு காட்டுதல் எனும்) இறக்கையைத் தாழ்த்துவீராக!

فَإِنْ عَصَوْكَ فَقُلْ إِنِّي بَرِيٓءٌ مِّمَّا تَعْمَلُونَ ﴿٢١٦﴾ وَتَوَكَّلْ عَلَى الْعَزِيزِ
الرَّحِيمِ ﴿٢١٧﴾ الَّذِي يَرٰىكَ حِينَ تَقُومُ ﴿٢١٨﴾ وَتَقَلُّبَكَ فِي السّٰجِدِينَ ﴿٢١٩﴾
إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿٢٢٠﴾ هَلْ أُنَبِّئُكُمْ عَلٰى مَنْ تَنَزَّلُ الشَّيٰطِينُ ﴿٢٢١﴾
تَنَزَّلُ عَلٰى كُلِّ أَفَّاكٍ أَثِيمٍ ﴿٢٢٢﴾ يُّلْقُونَ السَّمْعَ وَأَكْثَرُهُمْ كٰذِبُونَ ﴿٢٢٣﴾
وَالشُّعَرَآءُ يَتَّبِعُهُمُ الْغَاوٗنَ ﴿٢٢٤﴾ أَلَمْ تَرَ أَنَّهُمْ فِي كُلِّ وَادٍ
يَّهِيمُونَ ﴿٢٢٥﴾ وَأَنَّهُمْ يَقُولُونَ مَا لَا يَفْعَلُونَ ﴿٢٢٦﴾ إِلَّا الَّذِينَ اٰمَنُوا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَذَكَرُوا اللّٰهَ كَثِيرًا وَّانْتَصَرُوا مِنْۢ بَعْدِ مَا
ظُلِمُوا ۗ وَسَيَعْلَمُ الَّذِينَ ظَلَمُوٓا أَيَّ مُنْقَلَبٍ يَّنْقَلِبُونَ ﴿٢٢٧﴾ ع ١١ ٣٦ ١٥

سُورَةُ النَّمْلِ مَكِّيَّةٌ وَهِيَ ثَلٰثٌ وَّتِسْعُونَ اٰيَةً وَّسَبْعُ رُكُوعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○

طٰسٓ ۚ تِلْكَ اٰيٰتُ الْقُرْاٰنِ وَكِتَابٍ مُّبِينٍ ﴿١﴾ هُدًى وَّبُشْرٰى
لِلْمُؤْمِنِينَ ﴿٢﴾ الَّذِينَ يُقِيمُونَ الصَّلٰوةَ وَيُؤْتُونَ الزَّكٰوةَ وَ
هُمْ بِالْاٰخِرَةِ هُمْ يُوقِنُونَ ﴿٣﴾ إِنَّ الَّذِينَ لَا يُؤْمِنُونَ بِالْاٰخِرَةِ
زَيَّنَّا لَهُمْ أَعْمَالَهُمْ فَهُمْ يَعْمَهُونَ ﴿٤﴾ أُولٰٓئِكَ الَّذِينَ
لَهُمْ سُوٓءُ الْعَذَابِ وَهُمْ فِي الْاٰخِرَةِ هُمُ الْأَخْسَرُونَ ﴿٥﴾

216. ஆகவே உமக்கு அவர்கள் மாறு செய்தால், "நிச்சயமாக நீங்கள் செய்வதைவிட்டும் நான் நீங்கியவன்" என்று கூறுவீராக!
217. (யாவரையும்) மிகைத்தவனாகிய, மிகக்கிருபையுடையவனின் மீது (சகலத்தையும் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்பீராக.
218. அவன் எத்தகையவனென்றால், நீர் (தனித்து வணங்குவதற்காக) நிற்கும்சமயத்தில், அவன் உம்மைப்பார்க்கிறான்.
219. சிரம்பணிவோரில் (ருகூவு, ஸுஜூது செய்வதுகொண்டு நீர் இருக்கின்ற போது) உம்முடைய இயங்குதலையும் (அவன் பார்க்கிறான்.)
220. நிச்சயமாக அவன் _ அவனே செவியேற்கிறவன், நன்கறிகிறவன்.
221. (விசுவாசிகளே!) ஷைத்தான்கள் எவர்மீது இறங்குகின்றனர் என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?
222 (செயலால்) பாவியான, (சொல்லால்) அதிகமாகப் பொய்கூறும் ஒவ்வொருவரின் மீதும் அவர்கள் இறங்குகின்றனர்.
223. தாங்கள் கேள்விப்பட்டதை, (அப்பொய்யர்களின் காதுகளில்) போடுகிறார்கள்; அவர்களில் பெரும்பாலோர் (பெரும்) பொய்யர்களே!
224. இன்னும் கவிஞர்கள் _ அவர்களை வழிகெட்டவர்கள் தாம் பின்பற்றுகிறார்கள்.
225. நிச்சயமாக அவர்கள் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் (தட்டழிந்து) திரிகிறார்கள் என்பதை நீர் காணவில்லையா?
226. இன்னும் நிச்சயமாக அவர்கள் தாங்கள்செய்யாதவைகளை(ச் செய்ததாக)க் கூறுகிறார்கள்.
227. (ஆயினும் அவர்களில்) விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, அல்லாஹ்வையும் அதிகமாக நினைவுகூர்ந்து, தாங்கள் அநியாயம் செய்யப்பட்ட பின் பழி தீர்த்துக் கொண்டார்களே அத்தகையோரைத்தவிர. மேலும், அநியாயம் செய்தோர், தாங்கள் எந்த மீளும் தலத்திற்கு திரும்பச் செல்ல வேண்டுமென்பதை (அதிசீக்கிரத்தில்) அறிந்துகொள்வார்கள்.

---

அத்தியாயம் : 27

## அந்நம்லு _ எறும்புகள்

வசனங்கள் : 93 மக்கீ ருகூஃகள் : 7

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. தா ஸீன் _ இவை குர்ஆனுடைய _ இன்னும் தெளிவான வேதத்தினுடைய _ வசனங்களாகும்.

2. விசுவாசங்கொண்டோருக்கு ஒரு நேர்வழியாகவும், நன்மாராயமாகவும் இருக்கிறது.

3. அவர்கள் எத்தகையோரென்றால், தொழுகையை நிறைவேற்றுவார்கள்; ஜகாத்தும் கொடுத்து வருவார்கள்; அன்றியும், மறுமையையும் அவர்கள் உறுதிகொள்வார்கள்.

4. நிச்சயமாக மறுமையைக்கொண்டு விசுவாசங்கொள்ளவில்லையே அத்தகையவர்கள் _ (அவர்களுடைய் நிராகரிப்பின் காரணமாக) அவர்களுடைய செயல்களை நாம் அவர்களுக்கு அலங்கரித்துக்காண்பித்துவிட்டோம். ஆகவே, அவர்கள் (அதில்) தட்டழி(ந்து திரி)கின்றனர்.

5. அவர்கள் எத்தகையோரென்றால், (இம்மையில்) அவர்களுக்குத் தீய வேதனை உண்டு; இன்னும், அவர்கள் மறுமையில் _ அவர்களே பெரும் நஷ்டமடைந்தவர்கள்.